**செய்தி வெளியீடு எண்: 138** **நாள்: 23.02.2018**

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு வரலாற்றில் எக்காலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் ஏராளமான திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவர். அவற்றின் ஒரு பகுதியாகத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடும் தமிழறிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணற்ற விருதுகளும் பரிசுப் பாராட்டுச் சான்றுகளும், நலத்திட்டங்களும் வழங்கிச் சிறப்பித்தார்கள். மேலும் ஒரு வரலாற்றுச் சாதனையாகத் தமிழ்ப்புத்தாண்டை சித்திரையில் மீட்டெடுத்து அரசின் விழாவாக ஆண்டுதோறும் சித்திரையில் நடத்திட அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதனடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் தமிழறிஞர்களுக்கு விருதுகளும், பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் தொடர்ந்து வழங்கி வருகிறார்கள்.

கடந்த 25.07.2014 அன்று மாண்புமிகு அம்மா அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110இன்கீழ் தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக அமைப்பு வைத்து அரும்பாடுபடும் ஆர்வலர்களைக் கண்டறிந்து அவர்தம் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் “தமிழ்ச் செம்மல்” என்ற விருதும் இவ்விருது பெறுபவர்களுக்கு ரூ.25,000/– பரிசுத் தொகையும் தகுதியுரையும் வழங்கப்படும் என்றும் அறிவித்தார்கள். இவ்விருது மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் (32 பேருக்கு) வழங்கப்படும். அவ்வறிப்பிற்கிணங்க 2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்ச் செம்மல் விருதுக்கு மாவட்டங்களில் தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழ் அமைப்பு வைத்து அரும்பாடுபடும் தமிழ் ஆர்வலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிப்பவர்கள் தன்விவரக் குறிப்பு அவற்றுடன் நிழற்படம் இரண்டு, அவர்கள் ஆற்றிய தமிழ்ப்பணி ஆகிய விவரங்களுடன் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் / தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகங்களில் 10.03.2018 ஆம் நாளுக்குள் அளிக்கப்படவேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**